# கிறிஸ்து இயேசுவுக்காகப் பயன்படவேண்டும்

உங்களிலுள்ள சகல நன்மைகளும் தெரியப்படுகிறதினாலே உம்முடைய விசுவாசத்தின் அந்நியோந்நியம் கிறிஸ்துஇயேசுவுக்காகப் பயன்படவேண்டுமென்று வேண்டுதல்செய்கிறேன். (பிலே 1:6)




இங்கு பவுல் பிலேமோனைப் பார்த்து இவ்வாறு கூறினாலும் இது ஒவ்வொரு விசுவாசிக்கும் பொருந்தும். ஆம், நாம் எவ்விதத்திலாவது கிறிஸ்து இயேசுவுக்காக பயன்பட வேண்டியவர்களாக உள்ளோம். முதலாவது, நமது இவ்வுலக வாழ்க்கை எவ்விதத்திலாவது அவருக்கு பயன்படக் கூடியதாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் நம்முள் இருக்க வேண்டும். ஆண்டவருக்காக எதையாவது செய்ய வேண்டும் என்ற துடிப்பு நம்முள் காணப்பட வேண்டும். இரண்டாவது, அதை சரியான விதத்தில் செய்ய வேண்டிய படி, நம்முடைய வாழ்க்கை முறையும் காணப்பட வேண்டும். வெறும் ஆர்வம் மட்டும் இருந்துவிட்டு, வாழ்க்கை ஓட்டத்தை வேறுவிதமாய் ஓடுவோமானால் அதனால் பயனில்லை. அல்லது ஏதோ வாழ்வின் சூழ்நிலை கட்டாயத்தினால், பணத்திற்காக வயிற்றுப் பிழைப்பிற்காக உண்மையான ஆர்வம் இன்றி, ஆண்டவருக்காக எதை செய்தாலும் அதனால் பலனில்லை. மேலும் தேவன் எவ்விதமாக பயன்படுத்த விரும்புகிறார் என்பதை உணர்ந்து அதற்கேற்ற காரியங்களைச் செய்ய வேண்டும். நம்மை சுவிசேஷகராக ஆண்டவர் அழைத்து இருந்தால், அதை உண்மையுடன் செய்ய வேண்டும். அதை விட்டு சபை ஊழியத்தையும் மற்ற காரியங்களை நாடக் கூடாது.

மேலும் இங்கு பிலேமோனுக்கு பவுல் கூறியதை போல, ஒவ்வொரு விசுவாசிக்கும் ஏதோ ஒரு அளவில் / சூழலில், கிறிஸ்துவுக்காக பயன்படக்கூடிய தருணம் கொடுக்கப்படுகிறது. அதை கண்டறிந்து உண்மையோடு ஆண்டவருக்காக பணியாற்ற வேண்டும். நாம் சுவிசேஷ புத்தகங்களில் காணும்பொழுது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு உண்டு உறங்கி அவரோடு நித்தமும் இருந்து அவர் கூறும் வேலையையே தம் வாழ்க்கையாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் அப்போஸ்தலர்கள். இவர்கள் தம் முழு வாழ்க்கையையே கிறிஸ்துவுக்காக பயன்பட அர்ப்பணித்தவர்கள். அதேநேரத்தில்

ஆண்டவர் தங்கள் ஊர்களுக்கு வரும்பொழுது அவரைத் தங்கள் வீடுகளில் ஏற்றுக்கொண்டு அவருக்கும் அவரோடு இருந்தவர்களுக்கும், பணிவிடை செய்த மார்த்தாள் மரியாள் போன்ற குடும்பங்களும் உண்டு. மேலும் வேதம் கூறுகிறது "**ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்துகொண்டுவந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவருடனே இருந்தார்கள்.**" **(லூக் 8:3)** என்று. ஒருவேளை அப்போஸ்தலராக அழைக்கப்பட்டு, ஆண்டவரோடு இணைந்து செய்யும் அப்போஸ்தல ஊழியம் மேன்மையானதாக இருந்தாலும், எல்லா நிலைகளிலும் ஆண்டவருக்காக எதையாவது செய்வோரை அவர் நோக்கிக் கொண்டிருக்கிறார். நிச்சயமாக அதற்கான பலனை அவர் தருவார். அதனால்தான் ஆண்டவர் கூறினார், "**சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்**" **(மத் 10:42)** .

இப்படியாக நாம் செய்யும் செயல் எதுவானாலும் கிறிஸ்துவுக்காக பயன்பட அதை செய்யும் பொழுது, அது அநேகருக்கு ஆசிர்வாதமாய் அமைகிறது. சபையாகிய கட்டிடத்தை சேர்ந்த கட்டும் பணியாக அது அமைகிறது. இவ்வாறு செய்யும் செயலுக்காக ஆசிர்வாதத்தை இம்மையிலும் மறுமையிலும் நாம் பெற்றுக்கொள்வோம். இன்று நாம் காணும் அனேக மிஷன் ஊழியங்கள், பள்ளி கல்லூரிகள், மருத்துவமனைகள் என்பவைகள் எல்லாம் யாரோ சிலர் கிறிஸ்துவுக்காக பயன்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்பட்டதால் உருவானதாகும். இதற்கு முழுமையான அர்ப்பணிப்பும் கீழ்ப்படிதலும் தேவை. இப்படி கிறிஸ்துவுக்காக பயன்பட சில சிறிய காரியங்களை அர்ப்பணிக்கும் பொழுது, அதிலிருந்து அற்புதமான மேன்மையான பெரிய காரியங்கள் வெளிப்படுகிறது. உதாரணமாக 2 மீனும், 5 அப்பமும் அளவில் ஒன்றும் இல்லாததாய் இருந்தும், அதை கிறிஸ்து இயேசுவுக்காக அர்பணித்த பொழுது, அவர் அதை பெருகச் செய்து அநேகருக்கு ஆசீர்வாதமாக மாற செய்தார். எனவே கிறிஸ்து இயேசுவுக்காக பயன்பட நாம் கொடுக்கும் காரியம் சிறியதானாலும் பெரியதானாலும் அதை முழு மனதுடன் அர்ப்பணிக்கும் பொழுது, அது அநேகருக்கும் நமக்கும் ஆசிர்வாதமாய் காணப்படுகிறது. ஆனால் இன்று சிலர் பெரிய அளவில் பணத்தை நேரத்தை மனிதவளத்தை வைத்து, கிறிஸ்துவுக்காக பெரிய காரியங்களை செய்பவர்கள் போல, மிகப்பெரிய சபை கட்டிடங்களையும், ஆராதனை கூடங்களையும் கட்டுகின்றனர். சிலர் மிகப்பெரிய பொருட்செலவில் பாடல்களை வெளியிடுகின்றனர். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர். ஆனால் அவற்றின் மூலம் அவர்கள் பிரபலமாகிறார்களே தவிர கிறிஸ்து இயேசுவுக்கு பயன்படும்படி அங்கு எதுவும் காணப்படுவதில்லை.

நம் தேசத்திலும், உலகமெங்கிலும் இன்றும் ஆண்டவரை அறியாத மக்கள் உண்டு. சபையாக கூடி ஆராதிக்க இடமில்லாத மக்கள் உண்டு. தங்கள் அடிப்படை தேவைகளை கூட சந்திக்க முடியாத நிலையில் ஊழியர்களும் சபை விசுவாசிகளும் உள்ளனர். எனவே கிறிஸ்து இயேசுவுக்காக பயன்பட எதையாவது செய்ய நினைப்பவர்கள், உண்மையான தேவைகளை அறிந்து, அதற்காக பணத்தையும் மனித பெலத்தையும் செலவழிக்க வேண்டுமே தவிர, பெயர் பிரஸ்தாபத்திற்காக செய்யக்கூடாது. அதனால் ஆசிர்வாதத்திற்கு பதிலாக, சாபமே வந்து சேரும். எனவே நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும், எப்படியாயினும் கிறிஸ்து இயேசுவுக்காக பயன்படவேண்டும் என்பதை உணர்ந்து, அதை செய்ய வேண்டிய பிரகாரம் செய்ய தேவ கிருபையை தேடி, செய்வோமானால், அது ஆண்டவருக்கு மகிமையையும், அநேகருக்கும் நமக்கும் நன்மையையும் கொண்டுவரும், ஆமென் அல்லேலூயா.